கவன ஈர்ப்புகள்

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

சில மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதை வருவாய்த்துறை மானிய கோரிக்கையில் பதில் உரைக்கும்போது நான் தெளிவுபடுத்தினேன். மதுரை மாவட்டம், அண்ணா மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராஜ் மாவட்டம் ஆகிய வரம்புக்கு உட்படுத்தி ஒரு புதிய வருவாய் நீதி மன்றம் அமைக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது. விரைவில் அமைக்கும் சூழ்நிலை ஏற்படும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று திண்டுக்கல் பகுதியில் இருந்து திருச்சிக்கு வரவேண்டிய அவசியம் ஏற்படாது. மதுரையிலேயே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வழி வகை ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு ரெவின்யூ கோர்ட் வீதம் அல்லது ஏற்கெனவே விசாரித்தபடி அங்கே இருக்கக்கூடிய சப் கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுத்து இப்படிப்பட்ட இந்த ''கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்ட்''—சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே பல்வேறு இடங்களில் சப் கலெக்டர்களுக்கு அந்த அதிகாரம் இருந்து கொண்டு வருகிறது. சப் கலெக்டர்கள் பல்வேறு பணிகளை ஆற்றுவதன் காரணமாக இதில் அதிக கவனம் செலுத்த முடியவில்லை. ஆகவே, வருவாய் நீதிமன்றம் என்று தனியாக ஏற்படுத்தப்பட்டு, கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு திருச்சியில் ஒன்றும் மதுரையில் ஒன்றும் மற்றும் வேறு பல இடங்களிலும் ஏற்படுத்தப்பட இருக்கிறது. இதன் காரணமாக வருவாய் நீதிமன்றம் என்று அமைத்து விடுகின்ற போது அதில் அமைக்கப்படுகின்ற ஆர்.டி.ஓ., அல்லது சப் கலெக்டர்கள் முழுமையாக இதைப்பற்றி ஆராய்வதற்கு வழி ஏற்படும். அந்த வகையில் அண்ணா மாவட்டத்திற்கும், மதுரை மாவட்டத்திற்கும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு நல்ல வாய்ப்பு ஏற்படும்.

(10) அரசுப் பணிகளில் தற்காலிகமாக பணியாற்றுபவர்களை நிரந்தரமாக்குவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி. பி. சிந்தன், அ. ரகுமான்கான், டி. ஆர். வேங்கடரமணன், பி. கே. எம். முத்துராமலிங்கம், ஜே. முகம்மது கனி மற்றும் ஆர். செங்காளியப்பன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்

கவன ஈர்ப்புகள்
(பேரவைத் தலைவர்)

புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழக அரசின் பல்வேறு அலுவலகங்களில் தற்காலிக ஊழியர்களாக பணியாற்றி வெளியேற்றப்பெற்ற இள நிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தர்கள் ஆகிய சுமார் 3,000 பேரை 22–9–1984 ஆம் தேதியிட்ட, தமிழ்நாடு அரசு ஆணை ஜி.ஓ. 996-ன்படி நிரந்தரம் செய்வதாகக் கூறி விண்ணப்பங்கள் பெற்று இன்னும் அவர்களுக்கு நிரந்தர வேலை அளிக்காதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட, அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தற்காலிகமாக அரசு அலுவலகங்களில் பணிபுரிந்த இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க வேலை வாய்ப்பகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணி/தமிழ் நாடு நீதி அமைச்சுப் பணி ஆகியவற்றில் தற்காலிகமாக வேலை பார்த்து வந்த இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் தலைமைச் செயலகப் பணியில் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் அனைவரையும் 25–6–1984 அன்று அவரவர்கள் பணி புரிந்த துறையிலேயே பணியினை வரன்முறை செய்ய 22–9–1984 ஆம் நாளிட்ட அரசு ஆணையின்படி அரசு உத்திரவிட்டுள்ளது.

(2) 25–6–1984 அன்று பணியில் இல்லாதவர்களும், மேற் கூறிய 22–9–1984 அன்று வெளியிடப்பட்ட அரசு ஆணையின் படி, பணியினை வரன்முறை செய்யப்படாத பணியாளர்களிட மிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்யப் பட்டது.

(3) தேர்வாணையம் சில ஆண்டுகளுக்கு தேர்வு நடத்தாததி னால், தேர்வாணையம் மூலம் ஆட்கள் தேர்ந்தெடுக்க முடியாமல் போனதன் காரணமாக வேலை வாய்ப்பகம் மூலம் ஏராளமான துறைகளில் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்டவர்களின் பணியினை முறைப்படுத்துவதற்கு அரசு இசைவளித்தது. தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிகளுக்கு அண்மையில் தேர்வு

நடைபெற இருப்பதாலும் இந்தக் கடுமையான போட்டித் தேர்வின் மூலம் மிகத்தரமுள்ளவர்களும், கட்டுப்பாடு உள்ளவர்களுமான ஊழியர்களை அரசுப் பணிக்குத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு உள்ளது. அடிக்கடி தற்காலிகப் பணியாளர்களை அரசுப் பணியில் இருந்தமைக்காகவும் இரக்கம் காரணமாகவும் நிரந்தரப் படுத்துவதென்பது முறையான செயலாகாது என்பதால், தற்போது குறிப்பிடப்படுள்ளவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்பதற்கில்லையென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 10–00)

(11) தமிழகத்தின் பல பகுதிகளில் நிலவும் வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையைப் போக்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. சுப்பராயன், ச. கோவிந்தசாமி, சி. பழனிமுத்து, என். எஸ். வி. சித்தன், பி. கே. எம். முத்துராமலிங்கம், இரா. தாமரைக்கனி, ப. தீர்த்தராமன், க. சோலைராசு, ஆ. நடராசன், கு. ரமணி, கோ. வீரய்யன், வி. பி. சிந்தன், ப. ந. இராமச்சந்திரன், மு. மாரிமுத்து, ச. பாலகிருஷ்ணன், மா. சுந்தரதாஸ், ஆர். ரெங்கசாமி, த. புஷ்பராசு, டாக்டர் க. நல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு முழுவதும் நிலவிடும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையினால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் படும் இன்னல்கள், அதனைப் போக்கிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பருவ மழை பொய்த்ததின் காரணமாக சில மாவட்டங்களில் பாதக பருவ நிலை நிலவி வருவதாக மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. முதல் கட்டமாக மதுரை, அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கம், பெரியார் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் குடிநீர்ப் பணிகளுக்கென 10–3–1986 அன்று ரூ. 40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களுக்கு மேற்கொண்டு நிதி